இ.கு. (TG) - நி. வி. செ. வரிசை (FAME Series)
(இலக்கு குழு நிதி விழிப்புணர்வு செய்திகள்)






# முதியோர்கள் நிதிக் கல்வி

நிதியியல் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுத் துறை, இந்திய ரிசர்வ் வங்கி

## செய்தி 1

பொன்சி மற்றும் மோசடித்திட்டங்களிடம் ஜாக்கிரதை

## செய்தி 2

வங்கிகள் மற்றும் வங்கிக் குறைதீர்ப்பாளர்களிடம் புகார்களை எவ்வாறு பதிவு செய்யலாம் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்

## செய்தி 3

சொத்துரிமை - திட்டமிடல் கருவிகள்

## செய்தி 4

நீங்கள் ஒரு ஓய்வூதியதாரர் என்றால், புன்னகை செய்ய உங்களுக்கு நல்ல காரணங்கள் உள்ளன

## செய்தி 5

ஓய்வுக்குப்பிந்தைய வாழ்க்கைக்கு ஏற்றமுதலீட்டுத் திட்டங்கள்



# செய்தி 1 -பொன்சி மற்றும் மோசடித்திட்டங்களிடம் ஜாக்கிரதை



## தகவல் தெரிவித்து நெறியாளர்களுக்கு உதவிடுங்கள்

மோசடி பற்றி
தெரிவித்திடுங்கள்

பொன்சி திட்டங்கள்
பற்றி
அறிவித்திடுங்கள்

ஆர்.பி.ஐ.(RBI),
செபி (SEBI),
ஐ.ஆர்.டி. ஏ.ஐ (IRDA),
என்.ஹெச்.பி. (NHB)
ஆகியவற்றால்
ஒழுங்குபடுத்தப்படும்
நிறுவனங்களைப் பற்றி
மேலும் அறியவும்

புகார்களைப்
பதிவு செய்து
தொடர்ந்து
கண்காணியுங்கள்

புகார்களைப் பதிவு செய்து
பின்தொடருங்கள்
SLCC-ன்முன்முயற்சி
www.sachet.rbi.org.in

பல்வேறு
சட்டங்களைப்
பற்றி அறியவும்

நெறிமுறைக்குட்படாத
திட்டங்களைப் பற்றி
மேலும் அறிந்து
கொள்ளுங்கள்

உங்கள்
நெறிமுறையாளருக்கு
உதவுங்கள்

விழிப்புணர்வுத்
திட்டங்களின்
விவரங்களைக்
கண்டறிந்து, உங்கள்
ஊரில் / நகரத்தில்
நடக்கும்நிகழ்ச்சிகளில்
கலந்து
கொள்ளுங்கள்

## செய்தி 2 -வங்கிகள் மற்றும் வங்கிக் குறைதீர்ப்பாளர்களிடம் புகார்களை எவ்வாறு பதிவு செய்யலாம் என்பதைத்தெரிந்துகொள்ளுங்கள்

### புகார் தீர்வு

**முதல் படி**

மின்னஞ்சல்,
இணையத்தளம்,
இலவசவாடிக்கையாளர்
தொலைபேசி சேவை
மூலமாக உங்கள் வங்கியிடம்
புகார்களை
பதிவு செய்யவும்

பதில் பெற 30 நாட்கள் காத்திருக்கவும்

**இரண்டாம் படி**

வங்கி எந்த பதிலும் கொடுக்கவில்லை
என்றால் அல்லது பதில்
திருப்திகரமாக இல்லையென்றால்,
பின்னர் வங்கிக் குறைதீர்ப்பாளரை அணுகவும்.
20 வங்கிக் குறைதீர்ப்பாளர்
அலுவலகங்கள் நாடு முழுவதும் அமைந்துள்ளன.
தொடர்பு விவரங்கள் மற்றும் அனைத்து
வங்கிக் குறைதீர்ப்பாளர்களின் அதிகார வரம்பினையும்
பின்வரும் இணையதளத்தில் காணலாம்
https://www.rbi.org.in/Scripts/bs_viewcontent.aspx?Id=164.

குறைதீர்ப்பாளருக்குப் புகாரை மின்னஞ்சல்,
ஆன்லைன் அல்லது
போஸ்ட் மூலம் அனுப்பலாம்.

குறைதீர்ப்பாளர், வங்கி மற்றும் வாடிக்கையாளர்களுக்கு இடையில் ஒரு தீர்வைக் கொண்டு வர முயற்சிப்பார். பரஸ்பர உடன்பாடு ஏற்பட சாத்தியமில்லை என்றால்,அதன் பின்னர், குறைதீர்ப்பாளர் நடப்புகள் /உண்மைகள் மற்றும் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள்ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு தீர்ப்பினை அளிப்பார்.

**மூன்றாம் படி**

சில சூழ்நிலைகளில்,
குறைதீர்ப்பாளர்
வழங்கியதீர்வில் திருப்தியில்லை
என்றால், வாடிக்கையாளர்
30 நாட்களுக்குள்
மேல்முறையீட்டு அதிகாரியிடம்
மேல்முறையீடு செய்யலாம்.
இந்திய ரிசர்வ் வங்கியின்
துணை ஆளுநர் அவர்கள்
மேல்முறையீட்டு
அதிகாரி ஆவார்.


## செய்தி 3 -சொத்துரிமை - திட்டமிடல் கருவிகள்


மூத்த குடிமக்களுக்கான சொத்துரிமைத் திட்டமிடலுக்குப் பல கருவிகள் உள்ளன.அவைகளில் மிக முக்கியமானது வாரிசுதாரர் நியமனங்கள். எனினும், நியமனத்தைவிட உயில் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது

### வாரிசுதாரர் நியமன வசதி

| | | |
|---|---|---|
| அனைத்து நிதிப் பொருட்கள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடு, பாதுகாப்புப் பெட்டக வசதிகளுக்கு கிடைக்கும். | உயிரோடிருக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கு இன்னல்களைக் குறைத்து கோரிக்கைகளின் விரைவான தீர்வுக்கு உதவிடும். | நியமன கோரிக்கையை பதிவு செய்வதை உறுதி செய்திடுங்கள். தேவைப்படும் போது நியமனத்தைப் புதுப்பிக்கவும். |

### இதர சொத்துரிமை - திட்டமிடல் கருவிகள்



## செய்தி 4 – நீங்கள் ஒரு ஓய்வூதியதாரர் என்றால், நீங்கள் மகிழ்ச்சி அடைவதற்கு நல்ல காரணங்கள் உள்ளன

ஓய்வூதியத்திற்காகத் தனி கணக்கைத் தொடங்க வேண்டிய அவசியமில்லை




ஓய்வூதியக் கணக்கு மற்றொரு கிளை அல்லது வேறு வங்கிக்கு மாற்றப்படலாம்

ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தற்போதுள்ள கணக்கு பயன்படுத்தப்படலாம்

ஒவ்வொரு வருடமும், நவம்பர் மாதத்தில் உங்கள் வங்கி கிளைக்கு உங்கள் "உயிர்வாழ் சான்றிதழ்" சமர்ப்பிக்கவேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதை சமர்ப்பித்து சம்பந்தப்பட்ட வங்கியிலிருந்து கையொப்பமிடப்பட்ட ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளுங்கள். கடுமையான நோய் / நேரில் வர இயலாமை காரணமாக ஓய்வூதியதாரர் உயிர்வாழ் சான்றிதழ் பெற முடியாவிட்டால், அச்சான்றிதழ் பெறுவதற்காக வங்கி அலுவலர் அவரது இல்லத்திற்கு / மருத்துவமனைக்கு வருவார்.

ஆதார் கார்டு மற்றும் மொபைலைப் பயன்படுத்தி ஜீவன் பிரமாண் – டிஜிட்டல் உயிர்வாழ் சான்றிதழ் பெறலாம். www.jeevanpramaan.gov.in

## கூட்டுக் கணக்குகள் மற்றும் வைப்புத் தொகை முன்கூட்டியே திரும்பப் பெறுதல் பற்றிய விவரங்கள்

1. தங்களின் துணைவர் / துணைவியுடன் கூட்டுக் கணக்கு வைத்திருப்பது சிறந்தது. மேலும், வாரிசுதாரர் நியமனம் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும். அல்லது பின்வரும் வகையில் செயல்படுவதற்கான வழிகாட்டுதல்கள் கணக்குகளைச் செயல்படுத்த கொடுக்கப்பட்டிருக்கவேண்டும் – 1. “ஒருவர் அல்லது எஞ்சுபவர்” 2. “முன்னவர்/ எஞ்சுபவர்“

2. உங்கள் வைப்புத் தொகை / கால வைப்புத் தொகையை தேவையானால் முன்கூட்டியே திரும்பப் பெற வேண்டுமென்றால், அதற்கான ஆணையை நீங்கள் வைப்பாக தொகையை தொடங்கும்போதோ அல்லது வைப்புத் தொகையின் காலக் கெடுவிற்குள்ளோ கொடுத்திருக்கவேண்டும்.

3. நிலைவைப்புத் தொகையை தொடங்கும்போதே, அதன் முதிர்வின்போதுஎடுக்கப்படாவிட்டால், அந்த வைப்பை அப்போது நிலுவையிலிருக்கும் வட்டி விகிதத்தின்படி வங்கி தாமே அதைப் புதுப்பிப்பதற்கான வசதியை நாம் தேர்ந்தெடுக்கலாம்.

## முதியோர் /பிணியாளர் /ஊனமுற்றோர்க்கான வங்கிச்செயல்பாடுகள்

1. தாங்கள் வயதானவராகவோ, ஊனமுற்றவராகவோ இருந்தால் தங்கள் கட்டை விரல் கைரேகையைப் பயன்படுத்தி பணம் பெற்றுக்கொள்ளலாம். கைவிரல் ரேகை வங்கிக்குத் தெரிந்த இரண்டு சாட்சிகளால் அடையாளப்படுத்தப்பட வேண்டும். அவர்களில் ஒருவர் பொறுப்புள்ள வங்கி அதிகாரியாக இருத்தல் அவசியம்.

2. ஒருவரால் கைவிரல் ரேகை வைக்கமுடியாவிட்டாலோ, வங்கிக்கு நேரடியாகச் செல்ல முடியாவிட்டாலோ, காசோலை / பணம்எடுக்கும் படிவத்தில் ஒரு குறியீட்டை இட்டு அது இரண்டு தனித்தனி சாட்சிகளால் அடையாளப்படுத்தப்படவேண்டும். அவர்களில் ஒருவர் வங்கியின் பொறுப்புள்ள அதிகாரியாக இருத்தல் அவசியம்.

3. மேற்கூறிய வகையில் காசோலை / பணம் எடுக்கும் படிவம் பெறப்பட்டால், தொகையை யார் பெற்றுக்கொள்வார் என்பதை வங்கி கேட்கும். அவர் இரண்டு தனித்தனி சாட்சிகளால் அடையாளப்படுத்தப்படவேண்டும். அவ்வாறு பணம் எடுக்க மேற்குறிப்பிட்டவரால் நியமிக்கப்பட்டவர் தனது கையெழுத்தை வங்கிக்கு அளிக்க வேண்டியது அவசியம்.


# செய்தி 5 - ஓய்வுக்குப்பிந்தைய வாழ்க்கைக்கு ஏற்றமுதலீட்டுத் திட்டங்கள்

## மூத்த குடிமக்கள் திட்டம்



மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (SCSS) 2004. ஓய்வு பெற்ற நபர்களுக்கு ஒரு சிறந்த வழியாகும். SCSS ஆனது 2017-ல் 8.3% வட்டி வழங்குகிறது. மேலும் வட்டி ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் வழங்கப்படுகிறது. அவ்வாறு பெறப்பட்ட வட்டித் தொகை பொருந்தும் விகிதங்களில் வரிக்கு உட்பட்டது. இந்த முதலீடு 100%பாதுகாப்பானது, இருந்தாலும் இதில் ஒரு தனி நபர் முதலீட்டு வரம்பு ₹.15 லட்சம் ஆகும்.

## நிலையான வைப்பு




ஆண்டு வருமானம் ₹.5 லட்சத்திற்குள் இருப்பவர்களுக்கு நிலையான வைப்பு சிறந்த முதலீடாகும். ஏனெனில், அவர்கள் 5% வரி விதிப்பு எல்லைக்குள் இருப்பார்கள். ஆண்டு வருமானம் ₹.5 லட்சத்திற்கு மேல் இருப்பவர்கள், வைப்புத் தொகையிலிருந்து தாங்கள் பெறும் வட்டித் வருமானத்தில் 20%/ 30% வரையிலும் வரி செலுத்த வேண்டியிருக்கும்.

## ஓய்வூதியத் திட்டங்கள்



காப்பீட்டு நிறுவனங்கள் ஓய்வூதியத் திட்டங்களை வழங்குகின்றன. ஓய்வூதியத் திட்டங்களிலிருந்துபெறும் வருவாயின் விகிதம் முதலீடு செய்யும் நேரத்திலேயே குறிப்பிடப்பட்டு விடுவதால், அவை ஓய்வூதியதாரர் களுக்குக் கணிக்கக் கூடிய பணப் புழக்கத்தைத் தருகின்றன. இவ்வாறு வருடாந்திர வருமானம்பெற பல ஆண்டு கால, 5, 10, 15 என்று அளவைகளில் முதலீட்டுத் திட்டங்கள் உள்ளன. முதலீட்டாளர் இறந்தவுடன் கார்பஸைத் திரும்பப் பெறுதல், துணைவரின் வாழ்நாள் வரை வருடாந்திரத் தொகை பெறுதல் போன்ற பல வகையான திட்டங்கள் உள்ளன.மாத வருமானத் திட்டத்தைப் போல வருடாந்திர வருமானத்திற்கும் வரி விதிக்கப்படும்.

## நீர்ம நிதிகள்




ஓய்வூதியத் தொகை ₹.60 லட்சத்திற்கும் மேல் பெறுபவர்கள் நீர்ம பரஸ்பர நிதிகளைத் தெரிந்தெடுக்கலாம். அவை நல்ல வரி சலுகைகளை அளிக்கின்றன. பரஸ்பர நிதிகளின் திட்டத்தின் கீழ் நிதியானது பல்வேறு வங்கிகளில் குறுகிய கால நிலையான வைப்புகளிலும், அதிகக் கடன் மதிப்பீட்டுக் குறியீடு கொண்ட நிறுவனங்களிலும் முதலீடு செய்யப்படுவதால், இதில் நேரிடர் மிகவும் குறைவு. நீர்ம நிதி முதலீடுகளிலிருந்து பெறும் வருமானம் மூலதன ஆதாயங்களாகக் கருதப்படுகிறது. முதலீடு செய்யப்பட்ட 3 வருடங்களில் பணம் திரும்பப் பெறப்பட்டால், அது குறுகிய கால மூலதன ஆதாயங்களாக (STCG) கருதப்படுகிறது. STCG-ன் மீது விதிக்கப்படும் வரி நிலையான வைப்பு வருவாயின் மீது விதிக்கப்படும் விகிதத்திலேயே அமைந்திடும். ஆனால் 3 வருடங்களுக்குப் பிறகு பணம் திரும்பப் பெற்றால், குறியீட்டு நன்மைகள் கிடைக்கும்.இதன்மீது விதிக்கப்படும் வரிவிதிப்பு விகிதம் 20%(குறியீட்டுக்குப் பிறகு), குறியீட்டை கருதாமல் இருந்தால் வரிவிதிப்பு விகிதம் 10% ஆகும்.

## மாற்று அடமானம்



தேவைக்கும் குறைவாய் ஓய்வூதியத் தொகை பெறுபவர்களாக இருந்து, சொந்த வீடு வைத்திருப்பவர்களுக்கு மாற்று அடமானம் முறையானது கூடுதலான மாத வருவாய்க்கு வழிவகுக்கிறது. சமீபத்திய தீர்ப்பின்படி ஓய்வூதியதாரர்களுக்கு இவ்வகையில் கிடைக்கும் வருமானத்தின் மீது வரிவிலக்கு அளித்திருப்பது ஓய்வூதியதாரர்களுக்குக் கூடுதல் நன்மை தரக்கூடியதாகும்.

## மாதவருமானத் திட்டம்



இது ஓய்வுபெற்ற நபர்களுக்காக அஞ்சல் அலுவலகம் மற்றும் வங்கிகளால் வழங்கப்படும் மிகவும் பிரபலமான திட்டமாகும். ஏப்ரல் 01, 2017லிருந்து இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் வட்டி 7.6%ஆகும். வட்டித் தொகை மாத மாதம் வழங்கப்படும்.ஆண்டு வருமானம் ₹. 5 லட்சத்திற்கும் மேல் உள்ள ஓய்வூதியதாரர்கள் இந்த வட்டி வருவாயின் மீது 20% வரியாக செலுத்தவேண்டும். இதனால் உண்மையான வட்டி வருமான விகிதம் 6.24% குறைந்துவிடுகிறது.

## இந்திய ரிசர்வ் வங்கியின் சமீபத்திய அறிவுப்புகள் – மூத்த குடிமக்களுக்கான வங்கிச் சேவை

| மூத்த குடிமக்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் அர்ப்பணிக்கப்பட்ட முகப்புகள் | 'உயிர்வாழ் சான்றிதழ்' சமர்ப்பிக்கும் எளிய முறை | கணக்குகளின் வகையைத் தானாக மாற்றுதல் | 15G/H படிவத்தை நிரப்பும் எளிய முறை | வீட்டு வாயிலில் வங்கிச் சேவை |
|---|---|---|---|---|
| வங்கிகள் மூத்த குடிமக்கள், உடல் ஊனமுற்றோர் மற்றும் பார்வைக் குறைபாடு உடையோர் ஆகியோருக்கென்று பிரத்யேகமாக ஒரு முகப்பை தெளிவாகத் தெரியும்படியாக வைத்திருக்கவும் அல்லது அவர்களுக்கு முன்னுரிமை வழங்கும்படியும் அறிவுறுத்தப் படுகின்றன. | ஓய்வு ஊதியம் பெறுபவர்கள், ஜீவன் பிரமான் திட்டத்தின் கீழ் டிஜிட்டல் உயிர்வாழ் சான்றிதழை அளிக்கும் வசதியோடு, உயிர்வாழ் சான்றிதழின் படிவத்தை தாங்கள் ஓய்வூதியம் பெறும் வங்கியின் எந்தக் கிளையிலும் சமர்பிக்கலாம். அதைப்பெற்ற வங்கிகள் உடனே ஒருங்கிணைக்கப்பட்ட முக்கிய வங்கிச் சேவையில் அதை தளமேற்றம் செய்திடவேண்டும். இதனால் ஓய்வூதியம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். | KYC நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த வங்கிக் கணக்குகள்வங்கிப் பதிவேடுகளில் பராமரிக்கப்படும், பிறந்த நாளின் அடிப்படையில், மூத்த குடிமக்களுக்கான கணக்குகளாக தாமகவே மாற்றப்படும். | மூத்த குடிமக்கள், ஊனமுற்றோர் ஆகியோருக்கு வங்கிகள் 15G/H படிவத்தை ஒவ்வொரு வருடமும் (ஏப்ரல் மாதத்தில்) வழங்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.<br><br>இதனால் குறித்த காலத்திற்குள்அவர்கள் இதைச் சமர்ப்பிக்க ஏதுவாகிறது. | வங்கிகள், மேற்கூறிய வாடிக்கையாளர் களிடமிருந்து அடிப்படை வங்கிச் சேவைகளான, பணம் பெறுதல், பணம் செலுத்துதல் ஆகியவற்றை ரசீதுடன் பெற்றுக்கொள்ளல் அவர்களின் KYC ஆவணங்கள் சமர்ப்பிக்க உதவுதல், வரைவோலை வழங்குதல், 'உயிர்வாழ் சான்றிதழ்' பெறுதல் போன்றவற்றை வாடிக்கையாளர்களின் வீட்டிலேயே அளிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். |

## வருமான வரி தாக்கல் செய்வதற்கான படிகள்

| படி-1 | படி-2 | படி-3 | படி-4 | படி-5 | படி-6 |
|---|---|---|---|---|---|
| வருமான வரியை தாக்கல் செய்ய http://www.incometaxindiaefiling.gov.in என்ற இணையதளத்திற்கு செல்லவும். | ஏற்கனவே பதிவு செய்திருந்தால், உங்கள் PAN கார்டு எண், கடவுச் சொல்லோடு லாக் இன் செய்யவும். அல்லது ஏற்கனவே பதிவு செய்யப்படா விட்டால், உங்கள் PAN-ஐப் பதிவு செய்து கடவுச் சொல்லைப் பெறவும். | ஹோம் பிரிவில் முதல் பக்கத்தில் உள்ள பதிவிறக்கப் பிரிவிற்குச் சென்று ITR XL பயன்பாட்டைத் தேர்ந்தெடுக்கவும்.<br><br>ITR 1–சம்பளம் மூலம் வருமானம் பெறும் தனிநபர்கள், ஒரு வீடு உள்ளவர்கள் மற்ற ஆதாரங்கள் (வட்டி இதர) வருமானம் ஆக மொத்த வருமானம் ₹. 50 லட்சத்திற்குள் இருக்க வேண்டும்.<br><br>ITR-2–தனிநபர்கள் அல்லது HUFsவேறு எந்த உரிமையின் கீழும் வணிகம் அல்லது தொழில் நடத்தாதவர்களுக்காக.<br><br>ITR-4–வணிக மற்றும் தொழில் துறையில் இருந்து முன்னுரிமை நம்பகமான வருமானம் பெறுபவர்கள். | XL தாள் விவரங்களை பூர்த்தி செய்து XML கோப்பை உருவாக்குங்கள். | XML கோப்பை பதிவேற்ற உங்கள் PAN மற்றும் கடவுச் சொல்லுடன் லாக் இன் செய்யவும். | ஆதாரின் அடிப்படையிலான OTP மூலம் உங்கள் சமர்ப்பிப்பை e-verify செய்யவும். |

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 31 ஆம் தேதிக்கு முன் உங்கள் வருமானவரியைத் தாக்கல் செய்ய வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

### படிவம் 15G மற்றும் 15H

நீங்கள் 60 வயதுக்கு மேற்பட்டவராக வருமானவரிக் கணக்கு எண் (PAN) உடையவராக இருப்பின், உங்களின் ஆண்டு வருமானத்தின் மீது செலுத்தவேண்டிய வரி ஏதுமில்லையென்றால்,நீங்கள் படிவம் 15H–ஐ வங்கியிடம் சமர்பிக்கலாம். அப்போது வங்கிகள் உங்களின் வட்டித் தொகையிலிருந்து வருமான வரி விதிகள் 1962–ன்படி, வருமான வரியைக் கழிக்காது (TDS). நீங்கள்படிவம் 15பி–ஐ சமர்பிக்கும்போது, வங்கியிடமிருந்து அதற்கான ஒப்புகையைப் பெறவேண்டும். படிவம் 15H, 60 வயதுக்கு மேற்பட்ட இந்தியக் குடியிருப்பாளருக்கு உரியது. படிவம் 15G, 60 வயதுக்கும் குறைந்த இந்தியக் குடியிருப்பாளருக்கு உரியது. படிவம் 15G–ஐப் பயன்படுத்த, ஆண்டு முழுவதும் பல்வேறு வழிகளில் பெற்ற மொத்த வட்டி வருமானம், வருமான வரி விதிவிலக்குக்கு உரிய அதிகபட்ச வரம்புத் தொகைக்குக் குறைவாக (அந்த ஆண்டிற்குரிய 2017–18 ₹. 2,50,000) இருக்கவேண்டும். இது படிவம் 15G பயன்பாட்டிற்கான கூடுதல் நிபந்தனையாகும்.

வருமானவரியைத் தாக்கல் செய்வதில் எந்த உதவியும் உங்களுக்கு தேவைப்பட்டால், வருமான வரித் துறையினால் நியமிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட வருமானவரி அறிக்கை தயாரிப்பாளரை www.trpscheme.comஇணையதளத்தில் பெறலாம்.

மேலும் விபரங்களுக்கு தயவுசெய்து
www.incometaxindia.gov.in என்ற இணையதளத்தை அணுகவும்.

## குறித்த இலக்குக்கு உரிய நிதியியல் கல்விப் பாடங்கள்

இந்திய ரிசர்வ் வங்கியின் செயல் இயக்குநர் திரு.தீபக் மொஹந்தி அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட "அனைவரையும் உள்ளடக்கிய நிதியியலுக்கான இடைக்கால பாதை" குறித்த குழுவின் பரிந்துரைகளில் ஒன்று பின்வருமாறு - "வெவ்வேறு பிரிவினருக்கு வெவ்வேறுவிதமான நிதியியல் கல்வி தேவைப்படுவதனால், நிதியியல் கல்வியைப் பொறுத்தவரை, "ஒரே அளவு அனைவருக்கும் பொருந்தும்" என்ற கொள்கையின் அடிப்படையிலான அணுகுமுறை சிறந்தது அல்ல. இதன் விளைவாக, ஒவ்வொரு இலக்கு குழுவினருக்கும் ஏற்ற வகையில், நிதிக் கல்விப் பாடங்களின் கருத்துக்கள் தனிப்பட்ட முறையில் வடிவமைக்கப்பட வேண்டும்."

விவசாயிகள், சிறு தொழிலதிபர்கள், பள்ளி குழந்தைகள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் மூத்த குடிமக்கள் ஆகிய ஐந்து வெவ்வேறு இலக்குக் குழுக்களுக்கு ஏற்ற வகையில் நிதியியல்கல்விப் பாடத்தை இந்திய ரிசர்வ் வங்கியின் நிதியியல் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுத்துறை தனித்தனியே வடிவமைத்துத் தந்துள்ளது. நிதியியல் கல்வி சார்ந்து தனித்தனியே வடிவமைக்கப்பட்ட ஐந்து புத்தகங்களின் வரிசையில் இந்த புத்தகம் ஒன்றாகும்.

### பொறுப்புத் துறப்பு

இந்த புத்தகத்தை வாசிப்பவர் நிதியியல் கல்வி அறிவு பெறவேண்டும் என்கின்ற ஒரு உண்மையான நோக்கத்துடன் படிக்கவும், கற்பிக்கவும் ஏதுவானதாக இந்தப் புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட நிதியியல் பொருள் / பொருட்கள், அல்லது சேவை / சேவைகள் தொடர்பாக முடிவெடுப்பதில் தாக்கத்தை ஏற்படுத்துவது இதன் நோக்கம் அல்ல.

பதிப்புரிமை
முதல் பதிப்பு - ஏப்ரல் 2018
மூல ஆதாரம் தெரிவிக்கப்படும்பட்சத்தில், இதிலுள்ள கருத்துக்களை எடுத்துக் கையாள அனுமதியளிக்கப்படும்.

எழுதி வெளியிட்டவர்கள் -
நிதியியல் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுத் துறை
இந்திய ரிசர்வ் வங்கி
10-வது தளம், மைய அலுவலகக் கட்டிடம்
ஷாஹித் பகத் சிங் மார்க்
கோட்டை
மும்பை

அங்கீகாரங்கள்
வடிவமைப்பு - கௌசிக் ராமச்சந்திரன்

**நிதியியல் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுத்துறை,**
**இந்திய ரிசர்வ் வங்கி,**
10-வது தளம், மைய அலுவலகக் கட்டிடம், மும்பை, இந்தியா